2019 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சம்பந்தமில்லாமல் கேட்காதீர்கள்.*

திரு. பி. முருகன்: *கல்வித் துறை தொடர்புடையதுதான். வேப்பனஹள்ளி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியையொட்டி கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள். இல்லையென்றால், வேண்டாம்; உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

72—

மின்சாரம் வழங்குதல்

***13038—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், விசூரில் மின் விநியோகப் பாதையை மாற்றி, மருங்கூர் துணை மின் நிலையத்தின் மூலமாக மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற மின் பாதையை மாற்றி, மருங்கூர் துணை மின் நிலையத்தின் வழியாக மின்சாரத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அது reserve forest*–ல் 3 கிலோ மீட்டர் கடந்து வரவேண்டியுள்ள காரணத்தினால், அந்த வழியாகக் கொண்டு வர முடியாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நியாயமான கோரிக்கை. திருநாவலூரிலிருந்து 7.5 கிலோ மீட்டர் தூரத்தில் விசூர்* line *வருகின்றது. எனவே, அதோடு இணைத்து, உயர் மின்னழுத்த கம்பி அமைத்து, மின் பளு இல்லாமல் ஒரு மாத காலத்திற்குள் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியிலிருந்து வருகின்ற மின் விநியோகப் பாதை, பண்ருட்டி அருகிலுள்ள பூங்குணம் துணை மின் நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரம் வரை வருகிறது. அந்தப் பாதை வருகின்ற வழியில் இருக்கிற எலந்தம்பட்டு, கருக்கை, செம்மேடு போன்ற ஊராட்சிகளில் சவுக்கு அதிகமாகப் பயிரிடப்படுகிற காரணத்தினால், இலேசான மழை பெய்தாலும், காற்றடித்தாலும் உடனடியாக அந்த சவுக்கு மரங்களெல்லாம் அந்த மின் பாதையில் விழுந்து உடனடியாக மின் வெட்டு ஏற்பட்டு, அந்த கிராமமே இருளில் மூழ்கிவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. நான் அங்கேயுள்ள மின்சாரத் துறை அதிகாரிகளை விசாரித்ததன் அடிப்படையில், கோரிக்கையின் முக்கியத்துவத்தையும், மக்களுடைய சிரமத்தையும் உணர்ந்த காரணத்தினால், துறையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கே ஒரு துணை மின் நிலையத்தை அமைப்பதற்காக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், கேள்வி நேரத்தில் அமைதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கும், மாண்புமிகு அமைச்சர்கள் அதைக் கேட்டு பதில் சொல்வதற்கும் சரியாக இருக்கும். அமைதியாக இருங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையிலே ஈடுபட்டு, தனியாருக்குச் சொந்தமான 2.80 ஏக்கர் நிலம் தாழம்பட்டு கிராமத்திலே அடையாளம் காணப்பட்டு, அதற்கான முயற்சியிலே இறங்கி இருப்பதாக அறிகிறேன். அதற்குரிய நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கி, அந்தத் துணை மின் நிலையத்தை அங்கே அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே தடையில்லா மின்சாரம் மக்களுக்குக் கிடைக்கும். அதோடு, அந்தப் பகுதியின் அருகில் இருக்கிற மேலிருப்பு, கருக்கை, செம்மேடு, சேமக்கோட்டை, சிறுவத்தூர், எலந்தம்பட்டு, திருவாமூர் போன்ற கிராமங்களெல்லாம் பயன்பெறும் என்ற அடிப்படையிலே, இந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? அதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க உதவுவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

2019 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற பகுதியிலே, இப்பொழுது அந்த மின் பாதை கிட்டத்தட்ட 16 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. 16 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்ற காரணத்தினால், மின்னழுத்தமும் அதிகமாக இருக்கின்றது. அதேபோன்று அந்தப் பகுதியில் சவுக்குத் தோப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சில சமயங்களில் காற்றடிக்கின்றபோது,* conductor *மீது விழுகின்றபோது மின் பாதிப்பு ஏற்படுகின்றது. திருநாவலூர் துணை மின் நிலையத்திலிருந்து விரூர் பகுதி 7.5 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கின்றது. எனவே, அதை மனதிலே கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தற்காலிகமாக அதோடு இணைத்திட நடவடிக்கை எடுக்கும். 7.5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து உயர் மின் பாதை அமைத்து, உறுப்பினர் குறிப்பிடும் அந்தப் பகுதிக்கு மின்சாரம் கொடுக்கின்றபோது, மின்னழுத்தம் குறைவாக இருக்கும்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அரசு நிலம் ஏதேனும் இருக்கின்றதா என்று பார்க்கின்றபோது, அதிலே சில பிரச்சினைகள் இருந்தன. ஆகவே, இப்பொழுது அதற்காக தனியார் நிலத்தை ரூ.65 இலட்சத்திற்கு வாங்கியிருக்கின்றோம். அந்த இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். மாற்றுப் பாதையில் கொண்டு வருவதைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மருங்கூர் துணை மின் நிலையத்திலிருந்து கொண்டு வருகின்றபோது reserve forest *வருகின்றது.* Reserve forest*–ல் அனுமதி பெறுவது கடினம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதனால், தேவையின் அடிப்படையில், இப்பொழுது திருநாவலூரிலிருந்து உயர் மின் பாதையைக் கொண்டு வந்து, ஒரு மாத காலத்திற்குள் உடனடியாக அந்தப் பணியை நாங்கள் முடித்துவிடுகின்றோம். அந்தப் பகுதிக்கு சீரான மின்சாரம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால், பிற்காலத்தில் தேவையான மின்சாரம், மின்னழுத்தம் இல்லாமல் வழங்கப்பட வேண்டும்; அதேபோல, மின் பளுவும் குறைவாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அங்கு துணை மின்*

நிலையம் அமைக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் தனியாரிடம் நிலம் வாங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் பேரவை விதி 110–ன்கீழ் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 56 துணை மின் நிலையங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதில் ஒன்றை உறுப்பினர் கேட்கின்ற பகுதியில் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மாற்றுப் பாதையைத்தான் கேட்டோம். ஆனால் மக்களுடைய சிரமத்தை உணர்ந்துகொண்ட துறையும், அதன் அமைச்சர் அவர்களும் தற்காலிகமாக திருநாவலூர் S.S.–லிருந்து மின்சாரம் கொடுப்பதாகக் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுக்கின்றேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எனது தொகுதியில் உள்ள காட்டுக்கூடலூர் Feeder line–ல் முந்திரித் தொழில் Tariff 3(b)–ன்கீழ் 300 இணைப்புகளும், கடை சர்வீஸ் Tariff 5–ன்கீழ் 1,000 இணைப்புகளும், வீட்டு மின் இணைப்புகள் 1(a)–ன்கீழ் 7,000 இணைப்புகளும், ஊராட்சி குடிநீர் மோட்டார் இணைப்புகள் Tariff 2(b)–ன்கீழ் 300 இணைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. இதை நான் ஏன் சொல்கின்றேன் என்று சொன்னால், இவையெல்லாம் முந்திரி சம்பந்தப்பட்ட சிறு தொழில்கள், அதை நம்பி இருப்பவர்கள். அவர்களுக்கு அந்த நகர இணைப்பிலிருந்து மின்சாரம் தடை இல்லாமல் கிடைப்பதற்காக Town supply–ல் அதை இணைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும். அது மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது என்பதைத்

2019 ஜூலை 10]

தெரிவித்துக்கொள்கிறேன். இதனை செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கோரிய அந்தத் துணை மின் நிலையம் அவருடைய பகுதியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைய இருக்கின்றது. 110 கே.வி. கொண்ட ஒரு துணை மின் நிலையம் அது. கிட்டத்தட்ட 2.80 ஏக்கர் நிலம் 35 இலட்சம் ரூபாய் செலவில் கிரயம் செய்யப்பட்டிருக்கின்றது. அங்கே விரைந்து ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது நகரப் பகுதியிலிருந்து ஏற்கெனவே இருக்கின்ற மின்மாற்றியை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர் சொல்கின்ற அந்தப் பகுதியில் மின் பளு எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதை முதலில் ஆராய்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அதை மாற்றித் தருவதற்கு அதிகாரிகளோடு இன்றையதினமே ஆலோசித்து, அதற்குண்டான விளக்கத்தை நாளையதினமே தருகின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே சேமிக்க முடியாதது என்று ஒன்று இருக்கிறது என்றால் அது மின்சாரம்தான். மின்சாரத்தைச் செலவழிக்க முடியுமே தவிர, சேமிக்க முடியாது. அதனால்தான் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும்,*

அப்படிச் செலவு செய்கின்றபோதும் பாதுகாப்போடு அதைக் கையாள வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆயிரமாவது துணை மின் நிலையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள். துணை மின் நிலையத்திலிருந்து feeder line மூலமாக higher capacity transformer–ல் மின்சாரம் எடுத்துச் செல்லப்பட்டு, LT Line மூலமாக நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. அந்த higher capacity transformer–ல் என்ன பிரச்சினை வருகிறது என்று சொன்னால், அந்த மின்மாற்றியில் கிட்டத்தட்ட 500 முதல் 600 மின் இணைப்புகள் இருக்கின்றன. அந்த transformer–ல் ஏதாவது ஒரு பழுது ஏற்பட்டால், அதை off செய்கிறபோது அனைத்து மின் உபயோகிப்பாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, இதனைக் கருத்தில்கொண்டு, அந்த மின் தடையை நீக்குவதற்காக, higher capacity transformer–க்குப் பதிலாக, அதிக அளவில் single pole distribution transformers அமைத்துக் கொடுத்தால், அந்தக் குறைபாடு நிச்சயமாக நீக்கப்படும் என்று நான் கருதுகின்றேன்.

அதோடு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மாநகராட்சிப் பகுதிகளிலும், டெல்டா பகுதிகளிலும் Transformer அமைப்பதற்கு இடம் தேர்வு செய்வதில் சிக்கல் இருக்கிறது என்று அடிக்கடி சொன்னார். எனவே, அப்படிச் செய்தால் இந்த line loss–ம் குறையும்; இடப் பிரச்சினையும் தீரும். மேலும் நுகர்வோர்களுக்கு தடையில்லா மின்சாரமும் கிடைக்கும். எனவே, இதனை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இந்த higher capacity transformers–க்குப் பதிலாக, single pole distribution transformers–ஐ அதிக அளவில் அமைத்துத் தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–15

சமீபத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் FOC என்று சொல்லக்கூடிய Fuse off Call Centres–ஐத் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்த அந்த மையத்தைச் செயல்படுத்தக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் அந்த Centres–ஐத் துவக்கி வைத்துள்ளார்கள். இந்தத் திட்டம் பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. காரணம் என்னவென்றால், எங்காவது மின் பழுது ஏற்பட்டால், ஒரு consumer உடனடியாக phone மூலமாக, toll free எண்ணிற்குத் தகவல் தெரிவித்தால்,

உடனடியாக அந்தத் தகவல் cell phone *வைத்திருக்கிற* line man*–க்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டு, அந்தப் பழுது நீக்கப்படுகிறது. இருப்பினும், இப்பொழுது அந்த மின் தடை பழுது நீக்கும் மையங்கள்* Division *அளவிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனை உதவிப் பொறியாளர்கள் அலுவலக மட்டத்தில் அதிக அளவில் அமைத்தால், மின் தடை நிச்சயமாக நீக்கப்பட்டுவிடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. S. செம்மலை: *அதனை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அமைப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே குறிப்பிட்டது என்னவென்றால், மின்னழுத்தம், அதாவது, ஒரு* transformer*–ல் அதிகளவில் மின் இணைப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அந்த* transformer *பழுதாகின்றபோது, 500, 600 வீடுகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. எனவே, அதனை* single pole current transformer *மூலமாக மின் இணைப்பு தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இப்போது, அதுபோன்ற பணிகள்* IPDS *திட்டம் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து சரியான கருத்துதான். ஆனால், அந்த 500 மின் இணைப்புகள் இருக்கின்ற* transformer *திடீரென்று பழுதாகிவிட்டால், மாற்று ஏற்பாடாக வேறொரு* transformer*–லிருந்து மின் இணைப்பு கொடுப்பதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம். அத்தகைய ஒரு சூழ்நிலை இருக்கின்றபோது, சுமார் அரை மணி நேரத்தில் வேறொரு* transformer *மூலமாக மின்சாரம் கொடுத்துவிடுகின்றோம். இருந்தாலும், இந்த* line loss *குறைய வேண்டும். அதேபோல, மின் இணைப்புகளைக் குறைக்கின்ற வகையில் ஒரு சிறிய* transformer*–ஐ வைக்க வேண்டுமென்பதற்காகத்தான்* single pole current transformer *என்று சொல்லக்கூடிய அந்தத் திட்டத்தை தற்போது அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பகுதிகளிலும்,*

அரசின் நிதி நிலைமைக்கேற்ப, விரைந்து அந்தப் பணிகள் செய்யப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மின்சாரத்தைச் சேமிக்க முடியாது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைத்தான் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது நான் விளக்கமாகச் சொன்னேன். இப்போது காற்றாலை மின்சாரம் இருக்கின்றது. பகலிலே காற்றாலைகளின் மூலமாக கிட்டத்தட்ட, 3,000, 4,000 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் பெறப்படுகிறது. இரவிலே கிட்டத்தட்ட 1,000, 1,500 மெகா வாட் அளவிற்குக் குறைகின்றபோது, ஏற்கெனவே அனல் மின் நிலையம் மூலமாகப் பெறப்படும் மின்சாரம் அதிகமாக இருப்பதை பகலிலே குறைத்துவிடுகின்றோம். அவ்வாறு பெறப்படும் மின்சாரத்தைக் குறைத்துவிடுகின்றபோது, திடீரென்று இரவிலே காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரம் குறைகின்றபோது, எங்களால் உடனடியாக, தேவையான மின்சாரத்தைக் கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகிவிடுகின்றது. ஆக, அதுபோன்ற சூழ்நிலைகளையெல்லாம் எதிர்பார்த்துதான் மின்சார வாரியம், தடையில்லாத மின்சாரத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் எப்போது கொண்டு வந்தார்களோ, அப்பொழுதிலிருந்து இன்றளவிலும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல FOC என்று சொல்லக்கூடிய, Fuse off Call Centres இருக்கின்றன. 1912 என்ற தொலைபேசி எண்ணிற்கு கிட்டத்தட்ட 30 lines இருக்கின்றன. அந்த 30 lines மூலம் எங்களுக்குத் தொடர்ந்து புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதுபோக, என்னுடைய வீட்டிலும் தொடர்ந்து 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஒரு phone number–ம் இருக்கின்றது. அந்தந்தப் பகுதிகளில் A.E. அளவிலே அந்த வசதியைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய புகார் 1912 என்ற எண்ணிற்கு வந்தது என்று சொன்னால்—எவ்வாறு 108 எண்ணிற்குப் புகார் வந்தால், உடனடியாகத் தகவல் சொல்கிறார்களோ, அதைப்போல 1912 தொலைபேசி எண்ணிற்குப் புகார் வந்தால்—உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, ‘குறிப்பிட்ட பகுதியிலே மின் தடை ஏற்பட்டிருக்கின்றது, அந்தப் பழுதை நீக்கித் தாருங்கள்’

2019 ஜூலை 10]

என்று அறிவுறுத்துகிறோம். உடனடியாக 'அந்தப் புகார் எப்பொழுது வந்தது? எப்பொழுது அந்தப் பழுது நீக்கப்பட்டது?' என்பதையெல்லாம் பதிவு செய்யும் பேரேடு வைத்திருக்கின்றோம். ஆக, இந்தப் பணிகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். அரசின் நிதி நிலைமையையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அடுத்ததாக, WhatsApp calls*—எல்லாம் வைத்திருக்கின்றோம். இன்னும் எந்தளவிற்கு சேவைகளை வழங்க முடியுமோ அந்தளவிற்கு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6502—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டி பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் வெளியேறும் கழிவு நீர் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக,